**எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் மலேரியா புதிய நிதியிடல் மாதிரிக் கூறு -2017**

எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் மலேரியா புதிய நிதியிடல் மாதிரிக் கூறின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 பெப்ரவரி 29 ஆம் திகதிய 898-எல்கேஎ-எம்-எம்ஓஎச் ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 13(ஆ) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட மானிய உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கலிற்கு பொறுப்பாக உள்ளது. இலங்கையில் மிக உயர்ந்தளவிலான மலேரியா நோய்த்தாக்கத்துடன் தற்போது பாதிக்கப்படுகின்ற இலங்கையின் பிரச்சனைகளால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள ஒதுக்கப்பட்ட மக்களிற்கிடையில் மலேரியாவின் தீவிரத்தை கட்டுப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். மானிய உடன்படிக்கையின் பிரகாரம், புதிய நிதியிடல் மாதிரிக்கான மலேரியாவின் தீவிரத்தை கட்டுப்படுத்துவதற்காக செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 921.28 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 7.05 மில்லியன் தொகையானதுடன் முழுத் தொகையையும் உலகளாவிய நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 சனவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும்

நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நன்கொடை முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிசார் செயலாற்றல்

முன்னைய ஆண்டிற்கான செலவினத்துடன் ஒப்பிட்டு மீளாய்வாண்டிற்காக ஏற்பட்ட செலவின விபரங்கள் மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| வகுதி | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|---|---|
| | 2017 | | 2016 | | |
| | ஐ.அ.டொலர் | ரூபா | ஐ.அ.டொலர் | ரூபா | ரூபா |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 672,527 | 101,760,132 | 220,794 | 33,920,523 | 343,410,626 |
| மலேரியா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 1,765,608 | 269,180,284 | 991,446 | 147,745,226 | 1,714,396,816 |
| **மொத்தம்** | **2,438,135** | **370,940,416** | **1,212,240** | **181,665,749** | **2,057,807,442** |

### 2.2.2 காசுப்பாய்ச்சல் கூற்று

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| | 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | | 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | |
|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | ஐ.அ.டொலர் | ரூபா | ஐ.அ.டொலர் | ரூபா |
| வெளிநாட்டு உதவி – மானியத்திலிருந்து பெறப்பட்ட காசு | 1,828,565 | 278,764,789 | 886,875 | 132,162,100 |
| உள்நாட்டு நிதியங்களுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு உதவிகள் | 409,970 | 62,500,000 | 15,359 | 2,288,839 |
| சுற்று 08 வாக்குப்பணம் 13 இலிருந்து பெறப்பட்ட பெறுகைகள் | 8,619 | 1,314,000 | - | - |
| கேள்வி வருமானத்திலிருந்து பெறப்பட்ட காசு | 164 | 25,000 | 54 | 8,000 |
| நிகழ்ச்சித்திட்ட செலவினங்களிற்காக செலுத்தப்பட்ட காசு | (1,765,608) | (269,180,284) | (991,446) | (147,745,226) |
| ஆண்டிற்கான மிகை/ (பற்றாக்குறை) | 481,710 | 73,423,505 | (89,158) | (13,286,288) |
| பெறுமானத்தேய்வு | 253,859 | 38,411,411 | 270,121 | 40,253,371 |
| செலுத்த வேண்டியவைகளில் குறைவு | (342,527) | (53,088,451) | 492,429 | 75,651,863 |
| பெறவேண்டியவைகளில் அதிகரிப்பு | 284,261 | 44,018,656 | (434,086) | (66,688,699) |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 6,138 | 928,810 | (7,474) | (1,113,732) |
| பரிமாற்ற வேறுபாடு | 1,905 | - | (5,026) | - |
| ஆண்டின் போது செலுத்தப்பட்ட பணிக்கொடை | (3,260) | (493,337) | (6,012) | (895,992) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | **682,086** | **103,200,594** | **220,794** | **33,920,523** |

| | | | | |
|---|---|---|---|---|
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| நிலையான சொத்துக்கள் | (672,527) | (101,760,131) | (220,794) | (33,920,523) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(672,527)** | **(101,760,131)** | **(220,794)** | **(33,920,523)** |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| திறைசேரிக்கு திருப்பியனுப்பப்பட்ட காசு | (9,559) | (1,440,463) | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | **(9,559)** | **(1,440,463)** | - | - |
| காசில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ தேறிய குறைவு | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் மலேரியா புதிய நிதியிடல் மாதிரிக் கூறின் நடவடிக்கைகள் 2016 சனவரி 01 தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னைய செயற்திட்டத்தால் 2015 திசெம்பர் 31 வரை ரூபா 210.80 மில்லியனிற்கு கொள்வனவு செய்யப்பட்டு வரிசை அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன செயற்திட்டதின் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 62.50 மில்லியன் தொகையை இலங்கை அரசாங்கம் பங்களிப்புச் செய்திருந்த போதிலும் ரூபா 61.06 மில்லியன் தொகை கணக்கீட்டுத் தவறு காரணமாக இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பாக வருமானக்கூற்றிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

### 2.2.4 இணக்கம் செய்யப்படாத மீதிகள

செயற்திட்டத்தின் நிதித் தகவல்களை பொதுத் திறைசேரியால் பேணப்பட்ட பதிவேடுகளுடன் இணக்கம் செய்வதற்கு செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 72.27 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 474,055 நேரடி பணவளிப்புக்கள் திறைசேரிப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை

ரூபா 100,000 ஆகக்கூடிய எல்லையை விஞ்சி ரூபா 8.78 மில்லியன் கூட்டுமொத்தமான செயல்நிமித்த உப கட்டுநிதிகள் நிதிப்பிரமாணம் 371(5) மற்றும் 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக 45 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தன. மேலும், 11 சந்தர்ப்பங்களில் விடுவிக்கப்பட்ட ரூபா 744,950 கூட்டுமொத்தமான உப கட்டுநிதி 11 நாட்கள் தொடக்கம் 05 மாதங்கள் வரையான காலவீச்சிலான தாமதங்களுடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக, உரிய நோக்கத்திற்கு முன்னர் கிட்டிய திகதியில் உடனடியாக செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 910,175 கூட்டுத்தொகையான உப கட்டுநிதி மீளாய்வாண்டின் போது 14 தடவைகளில்

கொடுக்க வேண்டிய திகதிக்கு 1½ மாதங்கள் மற்றும் 10 மாதங்களிற்கு முன்னரே வழங்கப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, ஆண்டின் போது பெறப்பட்ட நிதிகள், மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜீஎவ்ஏரீஎம் | 7.05 | 921.28 | 5.20 | 1.80 | 278.00 | 2.61 | 398.65 |
| இலங்கை அரசாங்கம் | - | - | | 0.40 | 61.06 | 0.40 | 61.06 |
| மொத்தம் | **7.05** | **921.28** | **5.20** | **2.20** | **339.06** | **3.01** | **459.71** |

செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், ரூபா 921.28 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 7.05 மில்லியன் 2016 சனவரி 01 தொடக்கம் 2018 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் ரூபா 398.65 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 2.61 மில்லியன் மாத்திரம் 2017 திசெம்பர் 31 வரையிலும் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், உலகளாவிய நிதியத்திலிருந்து மீளளிக்கப்பட்ட ரூபா 20.32 மில்லியன் பயன்படுத்தப்படாத மீதி 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுத்திறைசேரியில் இருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

மலேரியா கூறின் நாளதுவரையாக்கப்பட்ட செயன்முன்னேற்ற மற்றும் பணவளித்தல் வேண்டுகை அறிக்கைகளின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டிற்காக 13 பாதீட்டுக் கிரய வகைப்படுத்தல்களினூடாக 183 பாதீட்டு வரிசை நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது 11 பாதீட்டு வரிசை நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததனால் ரூபா 19.78 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 151,350 ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்ட 73 பாதீட்டு வரிசை நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அளவிடப்பட்டு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

**3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியச் செயற்திட்டத்தின் மலேரியா புதிய நிதியிடல் மாதிரிக் கூறின் (என்எவ்எம்) நிதிக்கூற்றுக்கள் மீது பட்டயக் கணக்காளர் நிறுவகமொன்றால் தனியான கணக்காய்வு அறிக்கை சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அவற்றின் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஒத்துழைப்பு வேண்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 58 மில்லியன் கிரயதில் 06 மோட்டர் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது செயற்திட்டத்தால் ரூபா 22.20 மில்லியன் தொகை மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இலங்கை அரசாங்கத்தால் ரூபா 35.80 மில்லியன் மீதி தொகை பங்களிப்புச் செய்யப்பட்டிருந்தது. மேலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிற்குப் பதிலாக நாட்டிலுள்ள பகுதிகளிற்கு மோட்டார் வாகனங்களை பகிந்தளிப்பதற்கு நன்கொடை முகவர் வேண்டியிருந்த போதிலும் உரிய மோட்டார் வாகனங்கள் வட மாகாணத்திலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, கல்முனை, ஊவா மாகாணத்திலுள்ள மொனராகலை மற்றும் பதுளை மற்றும் வடமேல் மாகாணத்திலுள்ள குருணாகல் என்பவற்றிலுள்ள பிராந்திய வைத்திய உத்தியோகத்தர்கள் அலுவலகங்களிற்கு இணைக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மோட்டார் வாகனங்களின் கொள்வனவுடன் தொடர்புடைய கோலைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

02 நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், பொதுச் சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், 03 பிராந்திய தரவுப் பதியுனர்கள், 15 மைக்கிறோஸ்கொபி (Microscopy) மலேரியா உதவியாளர்கள் மற்றும் 11 நோய் பரவுவதை கட்டுப்படுத்தும் உதவியாளர்கள் ஆகிய பதவிகள் 02 ஆண்டுகளிற்கு மேலாக வெற்றிடமாக இருந்ததுடன் செயற்திட்ட நடவடிக்கைகளின் சீரான செயற்பாட்டிற்கு இது உயர்வாக தாக்கமளித்திருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 வரையிலும் அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காதமை அவதானிக்கப்பட்டது.

**3.5 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 134(3) இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் கொடுக்கல்வாங்கல்கள் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 345.11 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 2.28 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பாக 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.